Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2028 மார்கழி 22 செவ்வாய்க்கிழமை (06-01-1998) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 36

# நீதியான தேர்தலை அரசு உறுதிசெய்யும்!

## சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஜனவரி 6

யாழ். குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நீதியான - சுதந்திரமான - சட்டபூர்வமான - முறையில் நடத்தப்படுவதை உறுதி செய்வதற்கு அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்.

- இவ்வாறு உறுதி கூறியிருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா மொரதுங்க. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்றுக் காலை கொழும்பில் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசிய போதே இந்த உறுதியை ஜனாதிபதி அவரிடம் தெரிவித்தார்.

இச்சந்திப்புக் குறித்து சுரேஷ் பிரேமச்சந்திரன் வெளியிட்ட தகவல்கள் வருமாறு:-

யாழ். குடாநாட்டில் பதிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்படும் வாக்காளர்களின் எண்ணிக்கையில் அரைவாசித் தொகை வாக்காளர்களே தற்போது அங்கு உள்ளனர். இத்தகைய வேறுபாட்டைப் பயன்படுத்தி தேர்தல் நேரத்தில் பலதரப்பட்ட ஊழல்கள், ஒழுங்கீனங்கள், ஆள்மாறாட்டம், கள்ள வாக்களித்தல் போன்றவை நிகழ்வதற்கு வாய்ப்புண்டு என்ற அச்

( 8 ஆம் பக்கம் பார்க்க)

# அம்பாறையில் இரு தமிழர் கொலை: 7 முஸ்லிம் ஊர்காவலர்கள் கைது!

மட்டக்களப்பு, ஜன 6

அம்பாறை வீரமுனையில் இரு தமிழ் இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக ஏழு முஸ்லிம் ஊர்காவலர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

அவர்களை நாளை மறுதினம்வரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்ட நீதிவான் மேற்படி இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பாக அன்றையதினம் நடைபெறும் அடையாள அணிவகுப்பில் அவர்களையும் சேர்த்துக் கொள்ளும்படி உத்தரவிட்டார்.

மேற்படி இரட்டைக் கொலைச் சம்பவம் குறித்து தெரிய வருவதாவது:-

சம்மாந்துறைப் பகுதியில் அமைந்துள்ள மின்மாற்றிகளுக்கு பாதுகாப்பு அளித்துக் கொண்டிருந்த ஊர்காவலர் மீது விடுதலைப் புலிகள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# பல்கலை. அனுமதி பெறாதோர் துணை மருத்துவ சேவைக்கு தெரிவு?

## புதிய திட்டம் தயாராகிறது

கொழும்பு, ஜன. 6

ஜி. சீ. ஈ. (உயர்தரப்) பரீட்சையின் பெறுபேறுகளின்படி பல்கலைக்கழக அனுமதி பெறுவோர் போக, அடுத்த தரத்தில் உள்ளவர்களை தாதிகள், மருந்தாளர்கள், ஆய்வு கூடப் பரிசோதகர்கள், உடற்கூற்றுப் பயிற்சியாளர்கள் மற்றும் துணை மருத்துவ சேவைக்கான பயிற்சிகளுக்குத் தெரிவு செய்வது குறித்து ஆராயப்பட்டு வருகின்றது.

பொது நிர்வாக அமைச்சு, கல்வி — உயர் கல்வி அமைச்சு, சுகாதார அமைச்சு ஆகியவை கூட்டாகச் சேர்ந்து இதற்கான திட்டம் ஒன்றைத் தயாரித்து வருவதாக அறிய வருகின்றது.

இதுவரை காலமும் போட்டிப் பரீட்சை மூலமே துணை மருத்துவ சேவைக்கு ஆள் சேர்ப்பு இடம்பெற்று வந்தது என்பது தெரிந்ததே.

ஜி. சீ. ஈ. (உயர்தரப்) பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் இச்சேவைகளுக்கு ஆள்களை நிரப்பலாம் என்ற யோசனை தற்போது தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது (உ-21)

# படை அதிகாரிகள் பயிற்சி பெற கொழும்பில் பாதுகாப்புக் கல்லூரி!

## பிரிட்டிஷ் அரசின் உதவியுடன் நிறுவப்படும்

கொழும்பு, ஜன. 6

பிரிட்டிஷ் அரசின் உதவியுடன் இராணுவ அதிகாரிகளுக்குப் பயிற்சி வழங்கும் பொருட்டுப் பாதுகாப்புக் கல்லூரி ( Defence College ) ஒன்றை சப்புகஸ்கந்தவில் நிறுவுவது என அரசு தீர்மானித்துள்ளது.

பிரிட்டனில் உள்ள 'சண்ட்ஹர்ஸ்ட்' பாதுகாப்புக் கல்லூரியை ஒத்த கல்லூரியாக சப்புகஸ்கந்தவில் அமையவுள்ள கல்லூரி நிறுவப்படவுள்ளது.

[illegible] சர் ஜெனரல் அனுருத்த ரத்

(8 ஆம்பக்கம் பார்க்க)

## படையினர் இடையே தகராறு!

# கோப்ரல், சிப்பாய் சூட்டுக்குப் பலி!

மன்னார் மாவட்டம் கன்னாட்டிப் பகுதியில் உள்ள இராணுவ முகாமில் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இராணுவத்தினருக்கு இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் துப்பாக்கிச் சமரில் முடிந்ததில் இராணுவக் கோப்ரல் ஒருவரும் மற்றொரு சிப்பாயும் உயிரிழந்ததாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன

இச்சம்பவம் குறித்து இராணுவப் பொலீஸார் மேல் விசாரணை நடத்தி வருகின்றனர். (உ-21)

## ஷெல்லுடன் ஆயுதக்கப்பல் மறைவு:

# கோடீஸ்வர தமிழ் வர்த்தகர் கைதாகி விசாரணையில்

கொழும்பு, ஜன. 6

சிம்பாப்வேயின் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட பெருந்தொகையான ஷெல்களை ஏற்றிக்கொண்டு கொழும்புக்கு வந்த கப்பல் ஒன்று இடைவழியில் காணாமற்போனமை தொடர்பாக கோடீஸ்வர தமிழ் வர்த்தகர் ஒருவரைச் சீ. ஐ. டியினர் கைது செய்துள்ளனர்.

இவர் மேற்படி மோட்டார் ஷெல்களைச் சிம்பாப்வேயில் உள்ள ஆயுதக் கம்பனி ஒன்றிடம் இருந்து பெறுவது தொடர்பாக இலங்கை அரசின் பிரதிநிதியாகச் செயற்பட்டவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி தமிழ் வர்த்தகர் தீவிர விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளதாக 'லங்காதீப' பத்திரிகை செய்திவெளியிட்டுள்ளது.

இந்த மோட்டார் ஷெல் ஒன்றின் விலை சுமார் 4 ஆயிரத்து 800 ரூபாவாகும்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# 500 தொண்டர் ஆசிரியருக்கு விரைவில் நிரந்தர நியமனம்

## ஜனாதிபதி உறுதிமொழி

கொழும்பு, ஜன. 6

யாழ்ப்பாணத்தில் தற்போது தொண்டர் ஆசிரியர்களாகப் பணிபுரியும் ஆயிரத்து இருநூறு பேரில் முதல் தொகுதியாக ஐந்நூறு பேர், அவர்களை நிரந்தர ஆசிரிய சேவையில் சேர்த்துக் கொள்வது தொடர்பான நேர்முகப் பரீட்சைக்கு உடனடியாக அழைக்கப்படுவர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமக்கு இவ்வாறு நேற்று உறுதிமொழி தந்ததாக ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# 424 வாக்களிப்பு நிலையங்கள் 116 மையங்களில் அமையும்

யாழ்ப்பாணம், ஜன. 6

யாழ். குடாநாட்டில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களின் போது 424 வாக்களிப்பு நிலையங்கள் ஒன்றிணைக்கப்பட்டு 116 மையங்களில் இயங்கும்.

விடயமறிந்த வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

பெண்களுக்காக இருபது தனி வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ,9)

# தேர்தல் பணியில் ஈடுபட பொலீஸ் அதிகாரிகள் குழு

யாழ்ப்பாணம், ஜன. 6

குடாநாட்டில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான கடமைகளுக்குப் பொறுப்பாக நான்கு பொலீஸ் அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி மஹிந்த கெட்டியாராச்சி, உதவிப்பொலீஸ் அதிகாரி பத்திரன, யாழ்.பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி பத்மசிறி, இன்ஸ்பெக்டர் சமரக்கோன் ஆகிய நால்வருமே இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

தேர்தல் வன்முறைகள், வாக்காளர்கள், வேட்பாளர்கள் தொடர்பான பிரச்சினைகளை இக்குழுவே விசாரணை செய்யும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## தீர்வுத் திட்டம் தொடர்பான

# ஐ.தே.கவின் மாற்று கருத்து அடுத்த மாதமே வெளியாகும்

கொழும்பு. ஜன. 6

அரசாங்கத்தின் உத்தேச அரசியல் தீர்வுத்திட்ட யோசனைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிக்கும் மாற்றுக் கருத்துக்கள் அடுத்த மாத நடுப்பகுதியில் வெளியிடப்பட்டு விடும்.

ஐ. தே. க. தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க இவ்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## நாகேஸ்வரி நல்லையா

திருமதி நாகேஸ்வரி நல்லையா காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற நல்லையாவின் அன்பு மனைவியும், நகுலாம்பிகை, நவகுமார் (அபுதாவி), ஜெகதாம்பிகை (கல்வித் திணைக்களம், கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற இராஜகோபால், செல்வமலர் (அபுதாபி) ஆகியோரின் மாமியாரும், பாமதி, கரிதரன், பிரவித்தன், பாமினி, பாரதன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (7-1-98) புதன் காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
இ. நகுலாம்பிகை
(மகள்)

தேவாலய ஒழுங்கை,
தாவடி,
கொக்குவில்.
(49904)

## சின்னையா தங்கராசா

(இளைப்பாறிய பரிசோதகர், இ.போ.ச. கோண்டாவில்)

துன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பன்னாலையில் வசித்தவருமான சின்னையா தங்கராசா 05-1-98 இல் காலமாகிவிட்டார்.

இவர் சின்னையா செல்லாச்சிப் பிள்ளையின் அன்பு மகனும், செல்வரத்தினத்தின் அன்புக்கணவரும், காலஞ் சென்றவர்களான துரைராஜா, தங்கரத்தினம், அழகேந்திரம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று 06-1-1998 இல் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்.

தகவல்:
திருமதி செல்வரத்தினம்
(மனைவி)

மூணாமலை லேன்.
(மானிப்பாய் மகளிர் கல்லூரி முன்பாக)
மானிப்பாய்.
(52408)

## நாகலிங்கம் நாராயணபிள்ளை

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நா. நாராயண பிள்ளை அவர்கள் 03-01-98 இரவு காலமானார்.

அன்னார் பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும், அரியராசா (லிங்கன்) கனடா, அருந்தவம் (உடுவில்), அற்புதமலர் (ஜேர்மனி), அமிர்தவல்லி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ஜெகநாதன், நாணம்பிகை, தவராசா, கௌரிபாலன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04-01-98 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன. என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
மனைவி

கலாசாலை வீதி,
திருநெல்வேலி கிழக்கு.
(52393)

## கந்தசாமி ரமேஸ்தரன்

(புதிய அபிராமி அழகு மாடத்தின் உரிமையாளர்)

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தசாமி ரமேஸ்தரன் 02-01-98 அன்று சுகயீனங் காரணமாக கொழும்பு போதனா வைத்தியசாலையில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் அழகேஸ்வரி ஆகியோரின் அன்பு மகனும் திருமதி நவரட்ண யசிந்தா, பகீதரன், மதிதரன், சுரேஸ்தரன், காலஞ் சென்ற சிறிதரன், ரதிதரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ச. அழகேஸ்வரி (தாய்)

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.
(52395)

## சின்னத்துரை நடராசா

துரை வீதி, இணுவிலைச் சேர்ந்த சின்னத்துரை நடராசா 5-1-98 இல் காலமானார்.

அன்னார் புனிதவதியின் அன்புக் கணவரும், அகிலன் (சுவிஸ்), அமுதா, கவிதா (மாணவி, இராமநாதன் கல்லூரி), அரவிந்தன் (மாணவன், கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசரத்தினம், கண்மணி, இராசமலர், பேரின்பநாயகிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், மகேஸ்வரி, மகேந்திரராசா, S.P. நடராசா, S.P. விவேகானந்தன், சாரதாமணிதேவி, அன்னலெட்சுமி, அன்னபூரணம், மகாலெட்சுமி, ஜெயலட்சுமி ஆகியோரின் மைத்துனரும், தம்பிராசா, செல்வநாயகம், குலசிங்கம், தில்லையம்பலம், சிறிஸ்கந்தவரோதயன் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 6-1-98 இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 4 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி நடராசா புனிதவதி
(மனைவி)
S.P. விவேகானந்தன்
(மைத்துனர்)

துரை வீதி,
இணுவில்.
(52416)

## சமய சந்நிதியில்

நாட்டிலுள்ள சகலகத்தோலிக்க தேவாலயங்களில் இன்று செவ்வாய்க்கிழமை மூன்று இராசாக்கள் திருவிழா நடைபெறவுள்ளது. (இ-30)

★ ★ ★

இன்று நடைபெறுகின்ற வியாழ மாற்றத்தை முன்னிட்டு இன்று காலை 8.00 மணி முதல் நல்லூர் சிவன் கோயிலில் நவக்கிரக, ஸ்ரீதட்சணாமூர்த்தி பூஜையும் ஜப, ஹோம அபிஷேக ஆராதனைகளும் பிரதமகுரு பிரம்மஸ்ரீ கா. இரத்தினகைலாஸநாதக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளன. (ஐ)

## பாதுகாவலர் சங்க கூட்டம்

கைது செய்யப்பட்டுத் தகவலற்றோர் பாதுகாவலர் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஸ்ரான்லி வீதியில் உள்ள மேற்படி சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த 29 ஆம் திகதி ஜனாதிபதியுடன் இடம்பெற்ற சந்திப்புத் தொடர்பான விவரங்கள் நாளை நடைபெறும் கூட்டத்தில் சகலருக்கும் தெரியப்படுத்தப்படுமென சங்கத் தலைவர் ப. செல்வராசா தெரிவித்துள்ளார். (ஐ-7)

வெளிவந்துள்ளது!

**கணிதம் ஆண்டு 2**
**கணிதம் ஆண்டு 3**
**கணிதம் ஆண்டு 4**
**கணிதம் ஆண்டு 5**

புதிய பாடத்திட்டத்துக்கு அமைவானது.

**ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,**
யாழ்ப்பாணம்.
(52419)

**விக்னா**
**கல்வி நிறுவனம்**

**O/L பிரிவு!**
**DAY CLASS**
**(8.30 - 2.00)**
அடுத்த வகுப்பு:
08-01-98 8.30 AM
(52411)

**மலிவு விலையில்**

நாளை முதல் பாவனையாளர் நலன் கருதி மாட்டிறைச்சி விலை குறைக்கப்பட்டுள்ளது.

★ தனி இறைச்சி 130 ரூ
★ முள்ளுடன் இறைச்சி 110 ரூ

உரிமையாளர்
**பிரசாத் சந்தை மாட்டிறைச்சிக்கடை**
நவாலி.
(52407)

**லிபேட்டி சினிமா**
அச்சுவேலி.
இன்று
30 அடி அகலத் திரையில்
**விஜய், சங்கீதா**
நடித்த
**பூவே உனக்காக**
(52238)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா பூபதி

சண்டிலிப்பாயைச் சேர்ந்த கந்தையா பூபதி 05-1-98 இல் சிவபதமடைந்தார்.

இவர் காலம் சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் மற்றும் கமலவதனி, சந்திரவதனி, கமலநாதன், மதிவதனி, ஜெகநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ரவீந்திசராஜா, திருநாவுக்கரசு, கதிரமலை, பரமேஸ்வரி, வசந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் (06-01-98) இன்று நடைபெற்று பிப்பிலி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மருமகன், மகள்
திருநாவுக்கரசு, சந்திரவதனி (வவா)

சண்முகாவாசா,
சீரணிச் சந்தி,
சண்டிலிப்பாய்
(49902)

## வல்லிபுரம் சின்னத்துரை

பலாலி மத்தி வயாவிளானைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது வரணி இயற்றாலை வரணியில் வசித்தவருமான வல்லிபுரம் சின்னத்துரை 05-01-98 அன்று காலமானார்.

இவர் நன்னியர் வள்ளைப் பிள்ளையின் பாசமிகு மகனும், இந்திராவின் அன்புக் கணவரும், கார்த்தீபன், பிரதீபன், கீர்த்திகா, மயூரன், கவிதா, பிரசாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மயில்வாகனம் கனகம்மாவின் மருமகனும், காலஞ்சென்ற செல்லையா, சின்னத்தம்பி, இளையதம்பி (மூளாய்), இராசேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சூரியமூர்த்தி, இராசேந்திரம், இரத்தினம், சஸ்வதி, சரஸ்வதி, குமாரவேல், தனேஸ்வரி, தவம் (மந்திகை ஆதார வைத்தியசாலை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (06-1-98) செவ்வாய்க்கிழமை பகல் 10-00 மணியளவில் வரணி பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி இந்திரா
(மனைவி)

இயற்றாலை,
வரணி.
(52414)

## இராஜரட்ணம் அருளானந்தன்

(ஓய்வு பெற்ற எழுதுநர், பொலீஸ் திணைக்களம், யாழ்.)

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் 82/4 ஸ்ரான்லி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இ. அருளானந்தன் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற இராஜரட்ணம்- பராசக்தியின் அன்பு மகனும், தமிழேஸ்வரியின் அன்புக்கணவரும், திருமதி போ. யசோதரா (உபதபால் அதிபர், கடை வீதி, யாழ்.) முரளிதரன், கெங்காதரன், இராஜேந்திரன், பிரபாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், போலிங்கம் (கணக்குப் பதிவாளர் யா. மா. ச.), இரதிவதனி, ராகினி, குமுதினி ஆகியோரின் அன்பு மாமனாரும், திருமதி ச. சிவயோகநாயகி (திருமலை), திருமதி வ. தையல்நாயகி, செல்வி இ. தில்லைநாயகி, கருணாநிதி, மகாலக்சுமி, தயாநிதி, குணானந்தன் ஆகியோரின் அன்புச்சகோதரரும், மகாலிங்கம், திருமதி பூ. தனபாக்கியம், காலஞ்சென்ற பற்குணராஜா ஆகியோரின் மைத்துனரும், கிருஸ்ணப்பிரியா, கார்த்திகன், துளசி, அஜந்தா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்;
ந. போலிங்கம்
(மருமகன்)

(52480)

## திருமதி சிவஞானம் சிவகாமி அம்மை

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், அரியாலையை வசிப்பிடமாகவும் தற்போது கிளிநொச்சி ஐயன்கன்குளத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திருமதி சிவஞானம் சிவகாமி அம்மை அவர்கள் 3-1-98 அன்று வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா-சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற முத்துக்குமாரு செல்லம்மா தம்பதிகளின் அருமை மருமகளும், சிவஞானத்தின் அன்பு மனைவியும், சிவநாதன் (ஜேர்மனி), திருமதி கார்த்தியாயினி (கனடா), கமலாவதி, சிவனேசன், சிவச்செல்வி, சிவரூபன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சுரேஷ் (கனடா) அவர்களின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, நாகரெத்தினம், பரமசாமி, முத்துக்குமாரு (இராஜேஸ்வரி தச்சுத் தொழிற்சாலை, அரியாலை), புண்ணியமூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சுந்தரம், கனகரெத்தினம், விஜயசாவி, தங்கராசா, விமலாதேவி (கனடா) ஆகியோரின் அருமை மைத்துனியும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இறுதிக்கிரியைகளுக்காக வவுனியாவில் இருந்து ஐயன்கன்குளத்திற்கு எடுத்துச் சென்று 7-1-98 அன்னாரது இல்லத்தில் சமக்கிரியைகள் நடைபெற்று ஐயன்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
முத்துக்குமாரு சிவஞானம்
(கணவர்)

[சி/2559]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயோத்தி பிரச்சினைக்குத்தீர்வுகாண முஸ்லிம்தலைவர்களுடன்பேசுவோம்

## அத்வானி அறிவிப்பு

புதுடில்லி, ஜன. 6

''பாரதிய ஜனதாக்கட்சி ஆட்சிக்கு வந்தால் அயோத்திப் பிரச்சினைக்கு தீர்வு காண முஸ்லிம் தலைவர்களை அழைத்துப் பேச்சு வார்த்தை நடத்துவோம்''.

இப்படி பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் அத்வானி கூறியுள்ளார்.

அனைத்துத் தரப்பினரையும் அழைத்துப் பேசுவதன் மூலம் அயோத்திப் பிரச்சினைக்கு முடிவு காண முடியும் என்றும் அவர் கூறினார்.

அயோத்தியில் பாபர் மசூதி இடிப்புக்கு பின்னணியில் இருந்த பாரதிய ஜனதாக்கட்சி ஆந்திரப் பிரதேசத்தில் 200 முஸ்லிம் குடும்பங்களின் நன்மைக்காக இரு மசூதிகளைக் கட்டிக் கொடுக்க முன்வந்துள்ளதாக தெரியவருகிறது.

(இ-3)

## தாம் குற்றமற்றவர் என்கிறார் ஜெயலலிதா

சென்னை, ஜன. 6

தாம் குற்றமற்றவர் என்று அ. தி. மு. க. பொதுச் செயலரும், முன்னாள் முதலமைச்சருமான செல்வி ஜெயலலிதா தெரிவித்தார்.

நெல்லையில் நடந்து முடிந்த அ. தி. மு. கவின் வெள்ளிவிழாவில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

''என் மீதான குற்றச் சாட்டுகள்யாவும் பொய்யானவை'' என்றும் அவர் கூறினார்.

(இ-3)

## பாரதீய ஜனதா பதவி ஏற்றால் டில்லிக்கு முழு மாநில அந்தஸ்து

புதுடில்லி, ஜன. 9

மத்தியில் பாரதிய ஜனதா ஆட்சி அமைக்குமானால் டில்லியில் முழு மாநில அந்தஸ்து அளிக்கப்படும்.

இப்படி பாரதிய ஜனதா தலைவர்களில் ஒருவரான வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

டில்லியில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் அவர் இதனைக் கூறினார்.

பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சிக்கு வருமானால் வாஜ்பாய் பிரதமர் பதவி ஏற்க இருப்பது தெரிந்ததே.

(இ-3)

## அமைதிப்பணியில் ஈடுபடும் அமெ. படைபலம் அதிகரிக்கும்

அமெரிக்க அமைதிப் படையை இரட்டிப்பாக்க விருப்பதாக அமெரிக்க அதிபர் பில்கிளின்ரன் தெரிவித்தார்.

உலகம் எங்கும் சென்று அமைதிப்பணியில் ஈடுபடும் இத்தப்படையை விரிவாக்கும் தமது முயற்சிக்கு ஆதரவு தருமாறு அமெரிக்க காங்கிரஸுக்கு விண்ணப்பிக்கப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கென அமெரிக்க வரவு - செலவுத்திட்டத்தில் 5கோடி டொலரை அதிகரிக்க வேண்டியிருக்கும் என்றும் கூறப்படுகிறது.

தற்சமயம் 80நாடுகளில் அமெரிக்க அமைதிப்படையினர் பொருளாதார, சமூக முயற்சித்திட்டங்களில் பணியாற்றுகின்றார்கள்.

50 சதவீதத்தால் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டால் மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை 10 ஆயிரமாக இருக்கும்.

(இ-3)

## 40 ஆண்டுகள் மனைவியால் சிறைவைக்கப்பட்டு விடுவிப்பு!

பாங்கொக், ஜன. 6

40 ஆண்டுகளாக தமது மனைவியால் விலங்கிடப்பட்டு சிறை வைக்கப்பட்ட தாய்லாந்துவாசிஒருவர் அண்மையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

பாங்கொக் நகரில் இருந்து சுமார் 100 மைல் தூரத்திலுள்ள ரகசிய வீடொன்றில் சிறைவைக்கப் பட்டிருந்த நூவேயி தொன்சியாய் என்ற அந்தத் தாய்லாந்து வாசிக்கு தற்போது 86 வயது.

40 ஆண்டுகளுக்கு முன்னர் இவர் மனநோயால் பீடிக்கப்பட்டிருந்தார். அப்போது அவரது மனைவி அவரை நிர்வாணமாக்கி கால்களிலும், கைகளிலும் விலங்கிட்டு ரகசிய வீடொன்றில் சிறை வைத்தார்.

மனநோயால் பாதிக்கப்பட்ட தனது கணவன் அயலவர்களுக்கு தொல்லை கொடுக்க ஆரம்பித்ததாலேயே தான் கணவனுக்கு விலங்கிட்டு அவரைச் சிறை வைத்ததாக அவரது 64 வயது மனைவி தெரிவித்துள்ளார்.

(இ-10)

### உலக அரங்கில்

## ஐயப்ப பக்தர்கள் விபத்தில் காயம்

சென்னை, ஜன. 6

சென்னையைச் சேர்ந்த ஐயப்ப பக்தர்கள் பயணம் செய்த காரும், பஸ்ஸும் மோதிக் கொண்டதில் 13 ஐயப்ப பக்தர்கள் உட்பட 15 பேர் காயமடைந்துள்ளார்கள்.

(இ-3)

## கொங்கோவில் அடுத்த ஆண்டு தேர்தல்

கின்ஸாசா, ஜன. 5

கொங்கோ ஜனநாயகக் குடியரசில் (முன்னாள் ஸயர்) எதிர்வரும் 1999 ஆம் ஆண்டில் பொதுத் தேர்தல்கள் இடம்பெறும் என்று அந்நாட்டின் அதிபர் லோறன்ற் கபிலா அறிவித்துள்ளார்.

முன்னாள் அதிபர் முபுட்டு செசிசேகோவை புரட்சி மூலம் பதவியில் இருந்து விரட்டிவிட்டு நாட்டின் அதிகாரத்தை கடந்த மே மாதம் கபிலாக கைப்பற்றினார்.

(ஐ)

## வட அயர்லாந்து பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு முயற்சி

பெல்பாஸ்ட், ஜன 6

வட அயர்லாந்தில் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் அமைதி முயற்சியை முன்னெடுத்துச் செல்லும் நோக்கத்தோடு அமைச்சர் மோமொவலம் வெவ்வேறு பிரிவுகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கின்றார்.

அமைதி முயற்சிக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் அச்சத்தை அடுத்தே இந்தப் பேச்சுவார்த்தைகளை அவர் ஆரம்பிக்கவிருக்கிறார்.

இதுதொடர்பாகதாம் நடத்தும் பேச்சுக்களில் மந்த நிலை காணப்படுவதாக கூறப்பட்ட போதும், தாம் பேச்சுக்களைத் தொடரப் போவதாக அவர் தெரிவித்தார்.

நிரந்தர சமாதானத் தீர்வு இவ்வாண்டு முடிவதற்குள் எட்டப்படும் எனத்தாம் நம்புவதாகவும் அவர் கூறினார்.

(இ-3)

## இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் ராஜினாமா

ரெல்அவிவ், ஜன. 6

இஸ்ரேலில் அரசாங்கத்தின் வரவு - செலவுத்திட்டம் வறியவர்களைப் பாதிக்கும் என்று தெரிவித்து — அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து — வெளியுறவுத்துறை அமைச்சர் டேவிட்லெவி ராஜினாமாச் செய்துள்ளார்.

பிரதமர் நத்தனியாகு சமூகநலம் தொடர்பாக முன்னர் அளித்த வாக்குறுதிகளை செயற்படுத்தாமல் பின்வாங்கி விட்டார் என்று டேவிட்லெவி குற்றஞ்சாட்டினார்.

ராஜினாமாக் கடிதத்தை பிரதமருக்கு தாம் அனுப்பியிருப்பதாகவும் —

தாம் இனி அமைச்சரவை உறுப்பினர் அல்ல என்றும் — அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். லெவி தன்து ராஜினாமாக் கடிதத்தை வாபஸ் பெறுவார் என்று நத்தனியாகு நம்பிக்கை வெளியிட்டார்.

(இ-3)

## யாழ். கிரிக்கெட் அணியை தெரிவு செய்யும் போட்டி

### இன்று மத்திய கல்லூரி மைதானத்தில்

யாழ்ப்பாணம், ஜன. 6

யாழ். மாவட்ட கிரிக்கெட் அணியை தெரிவு செய்வதற்கான போட்டித் தொடரில் முதலாவது போட்டி இன்று காலை 9. 30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாக இருக்கிறது.

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படும் இந்த போட்டித் தொடரில் சிறப்பாக விளையாடுவோர் யாழ் மாவட்ட அணிக்கு தெரிவு செய்யப்படுவர்.

கடந்த சனிக்கிழமை பயிற்சிக்கு அழைக்கப்பட்ட வீரர்கள் இரு அணிகளாகப் பிரிக்கப்பட்டு இன்றைய போட்டியில் பங்குபற்றுவர்.

இன்று மோதும் எம். எஸ். தயாளன் தலைமையிலான அணியில் என். சிவரஜன் என். கார்த்திக், பி. முருகவேள், ஆர். ஷ’ஜகான், என் நிமலன், என். எஸ் பாஸ்கரன், பி. சஞ்சீவ், வி. கே. அரசரட்ணம், பி. சசிக்குமரன், எஸ். நிஷாந்தன் ஆகியோரும் —

எஸ். சுதேசன் தலைமையிலான அணியில் என். வீரசிங்கம், கே சீராளன், எம். ஆர். மோகனதாஸ், கே. சசிகரன், ரி. அருணோதயம், ரி. அரவிந்தன், வரப்பிரதன், எஸ். சுதேஷ்குமார், சுபாஸ்கரன், கிரீதரன் ஆகியோரும் — இடம் பெறுகின்றனர்.

# தொடர்ந்து பெய்யும் மழையால் வன்னியில் குளங்கள் நிரம்புகின்றன

வவுனியா, ஜன. 6

வன்னியில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழையால் குளங்கள் நிரம்பி வழிவதாக தெரிவிக்கப்படுகிறது.

### நீரில் மூழ்கி இருவர் உயிரிழப்பு

நீரில் மூழ்கி உயிரிழக்கும் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

கோட்டை கட்டிய குளத்தில் வீழ்ந்து சிவசுப்பிரமணியம் சத்தியதேவி (35 வயது) என்பவரும்.

அக்கராயன் குளத்தில் வீழ்ந்து செல்லையா தியாகராசா (60 வயது) என்பவரும் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மழை தொடர்ந்து பெய்வதால் அங்குள்ள மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-164-3)

### பிறப்பு-இறப்பு சான்றிதழ்

நவாலி, ஜன. 6

யாழ். மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் 97 ஆம் ஆண்டு 59 ஆயிரத்து 283 பிறப்பு, இறப்பு விண்ணப்பங்கள் கையேற்கப்பட்டு அதற்கான சான்றிதழ்கள் உரியவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(இ-100)

### மீளக்குடியமர்வு நிவாரணம்

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மேலும் 34 பேருக்கு மீளக்குடியமர்தல் நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக உதவித் திட்டப் பணிப்பாளர் இ. குமாரசுவாமி தெரிவித்தார்.

மக்கள் சேவையில் எம்மைப் பலப்படுத்தவும், மக்கள் சேவையை எமக்குள் பகிர்ந்து கொள்ளவும்

உங்கள் சின்னம் நங்கூரம்

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி

(புளொட்)

(67656)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



### குலராஜா யனுஜன்

இலந்தைக்காட்டைச் சேர்ந்த
குலராஜா — வசந்தரூபி தம்பதிகளின்
செல்வப் புதல்வன் யனுஜன்

தனது முதலாவது பிறந்தநினத்தை கவிஸில் இன்று (06-01-98) தனது இல்லத்தில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். யனுஜனை அப்பம்மா, ரஞ்சி அத்தை, ஜெயந்தி அத்தை, அந்திரான் யோகராஜா குடும்பம், சுவிஸ் மூத்தமாமா குடும்பம், லிங்கமாமா, சோபன் அத்தான், கொலன் மல்லிகாதேவி குடும்பம், நல்லூர் அம்மம்மா, ஐயா, பெரியம்மா குடும்பம், திருமதி லீலா செல்வநாதன் குடும்பம், திருமதி கௌரி தெய்வேந்திரம் குடும்பம், குட்டிமாமா, றமணிசித்தி மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் பல்லாண்டுகாலம் நலமே வாழ வேண்டும் என வாழ்த்துகின்றனர்.

இலந்தைக் காடு, - உறவினர்கள்
வல்வெட்டித்துறை (52392)

## உதவிப்பணம்

கொழும்புத்துறை, ஜன. 6

யாழ். பிரதேச செயலாளர் பிரிவில் காசநோய், தொழுநோய், புற்றுநோய் உதவிப் பணம் பெறுவோருக்கான டிசெம்பர் மாதக் கொடுப்பனவு இப்பிரிவுக்கு உட்பட்ட தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த உதவிப்பணம் பெறுவோர் உடனடியாகத் தத்தமது பகுதித் தபாலகங்களுக்குச் சென்று பணத்தினைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். பிரதேசச் செயலாளர் கேட்டுள்ளார். (இ-80 )

## நிலுவையுடன் சம்பளம்

கொழும்புத்துறை, ஜன.6

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் புதிய சம்பளத்திட்டத்தின் படி தமது பணியாளருக்கு இம் மாதம் முதல் இருமாத நிலுவையுடன் சம்பளம் வழங்கவுள்ளது. (இ-30)

## உணவு முத்திரை

நவாலி, ஜன.6

நவாலிகிராமசேவையாளர் பிரிவில் இடம் பெயர்ந்தவர்களுக்கான நிவாரண உணவு முத்திரைகள் அப்பகுதிகிராம சேவையாளர்களினால் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. (இ-160)

## மண்வெட்டி

நவாலி, ஜன.6

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வீட்டுத் தோட்டத்தில் ஈடுபட்டிருக்கும் 48 பேருக்கு மண்வெட்டி மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ் செல்வநாயகம் தலைமையில் உதவித் திட்டப் பணிப்பாளர் இ. குமாரசாமி இவற்றை வழங்கியுள்ளார். (இ-100)

# ஒலுமடு ராணுவ முகாம் மீது புலிகள் தொடர்ந்து ஷெல் வீச்சு

வவுனியா, ஜன. 6

மாங்குளத்துக்கு கிழக்கே - கனகராயன் குளத்துக்கு மேற்கே - அமைந்துள்ள ஒலுமடு இராணுவத் தளத்தின் மீது விடுதலைப் புலிகள் தொடர்ந்து மோட்டார் தாக்குதல் மேற்கொண்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற தாக்குதலில் ஒரு படை வீரர் காயமடைந்துள்ளார்.

ஒலுமடு முகாம் படையினரின் விநியோகமையமாகவும் —

'வெற்றி உறுதி' படையினருக்கு முக்கிய தளமாகவும் — உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

முகாமுக்கு பொருள்களை இறக்கிக் கொண்டிருந்த ஹெலி ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதல் நடத்தியதும் —

இதில் படையினர் சிலர் காயம் அடைந்ததும் - தெரிந்தவையே. (இ-164-3)

## முதலாண்டு நினைவலைகள்

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 21 | 18 |
| — | — |
| 03 | 12 |
| — | — |
| 1932 | 1996 |



### திருமதி இராசையா இராசம்மா


திதி: 06-01-1998

அன்பின் அணிகலமே! பாசத்தின் உறைவிடமே!
ஆண்டுகள் ஒன்றல்ல ஆயிரம் சென்றாலும்
உன் நினைவகலாது உன் நிழல் மறையாது.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

முருகமூர்த்தி கோயிலடி,
நெல்லியடி, கரவெட்டி. (52380)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### உயர்திரு. செல்லையா கணபதிப்பிள்ளை

(செ. க. வலலாய்)

தோற்றம்: 28-11-1922 மறைவு: 07-12-1997

எமது குடும்பத் தலைவரின் மரணச் சடங்கில் பங்கேற்றும், ஆறுதல் வழங்கியோர்களுக்கும், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவிகள் புரிந்த அயலவர்கள், உறவினர்கள், நண்பர்கள் யாவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

06-01-1998 இன்றைய நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்பர்கள் அனைவரையும் வேண்டிக் கொள்கின்றோம்.

சந்தை ஒழுங்கை,
ஆவரங்கால். குடும்பத்தினர். (51391)

## கேள்விப்பத்திரம்

யாழ். பல்கலைக்கழகத்திற்கு மருந்து வகைகள் வழங்கல்


பல்கலைக்கழக மருத்துவ நிலையத்திற்கு மருந்து வகைகள் வழங்குவதற்கு தகுதிவாய்ந்த விநியோகத்தர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

1. கேள்விப்பத்திரதாரர் யாழ். பல்கலைக்கழக உதவி நிதியாளர் (வழங்கல்) அவர்களுடன் தொடர்பு கொண்டு பல்கலைக்கழகத்துக்கு தேவையான மருந்துவகைப் பட்டியலை, அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
2. கேள்விப்பத்திரதாரர் தமது கூறுவிலைப் பட்டியலை 20-01-98 காலை 10-00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக தபால் உறையின் இடது புறத்தில் யு/ஜே/பிஓ/97 என எழுதப்பட்டு, நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

— பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(இ-2555)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



''சிவநெறிச்செம்மல்''

### சங்கரப்பிள்ளை நமசிவாயம்

(உரிமையாளர், அம்பிகா டிஸ்பென்சரி, சாவகச்சேரி.)

தோற்றம்: 22 — 08 — 1937 சிவபதம்: 06 — 01 — 1994

திதி: மார்கழி அபரபக்க தசமி

எங்கள் அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய
குடும்பத்தலைவரே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டுகள்
எத்தனை சென்றாலும்
தாங்கள் வாழ்ந்து காட்டிய வழியில்
நாங்கள் செய்வது தான் உங்களுக்கு நாம் செய்யும்
கைம்மாறு;

தங்கள் ஆத்மா என்றும் எங்கள் குல தெய்வமான சரசாலை துனுவில் சிதம்பர விநாயகர் பாதாரவிந்தங்களில் நீடு வாழ்க.

குடும்பத்தினர்.

சரசாலை வடக்கு, சாவகச்சேரி. (52386)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 150 பொலீஸ் அதிகாரிகள் மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள்!

கொழும்பு, ஜன. 6

கடந்த ஆண்டில் மாத்திரம் 150 பொலீஸ் உயரதிகாரிகள் மீது ஊழல் குற்றங்கள் சாட்டப்பட்டுள்ளன.

இக் குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் — குற்றஞ் சாட்டப்பட்டவர்களில் பிரதிப் பொலீஸ் மாஅதிபர்கள், மூத்த பொலீஸ் அத்தியட்சகர்கள், பொலீஸ் அத்தியட்சகர்கள் ஆகியோர் அடங்குவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மன்னிப்பு வழங்க முடியாத குற்றங்களே இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

★ சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

★ ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தனிநபர்களுடன் உறவாடியதுடன் அவர்களுக்கு ஒத்துழைப்புகளை வழங்கியது.

★ கொலை போன்ற குற்றவியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

★ அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தது.

★ அரச வாகனங்களை சொந்தத் தேவைகளுக்குப் பயன்படுத்தியது.

★ கடமையின் நிமித்தம் லஞ்சம் பெற்றது.

★ விசாரணைகளின்போது பக்கச் சார்பாகச் செயற்பட்டது.

ஆகியன இவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் ஆகும்.

இராணுவ நடவடிக்கைகள் இடம்பெறும் பகுதிகளில் காப்பரண்களை அமைப்பதற்கு அரசு வழங்கிய பழைய டயர்களை யுத்தமுனைக்கு அனுப்பாமல் தனது வீட்டுத்தோட்டத்துக்குப் பயன்படுத்திய மூத்த பொலீஸ் அத்தியட்சகர் மீதும் —

புலிகள் மீது தாக்குதலை நடத்துவதற்காக மோட்டார்களை வழங்கி அதற்காகப் படையினரிடமிருந்து ஆட்டுக்கடாக்களை கைமாறாகப் பெற்ற மூத்த பொலீஸ் அத்தியட்சகர் மீதும் குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன.

(இ-10)

## ஆறாயிரத்து 700 குடும்பங்கள் பொத்துவிலில் இடம் பெயர்வு

### மழை காரணமாக வெள்ளம்

கொழும்பு, ஜன. 6

பொத்துவில் பகுதியில் பெய்து வரும் பலத்த மழை காரணமாக பொத்துவில் பிரதேச செயலகப் பகுதி முழுவதிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

வெள்ளம் காரணமாக இடம் பெயர்ந்த சுமார் ஆறாயிரத்து 700 குடும்பங்கள் அப்பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் தற்காலிகமாக தஞ்சம் புகுந்துள்ளன.

சியம்பலாந்துவ - பொத்துவில் நெடுஞ்சாலை முற்றாக நீரில் மூழ்கி உள்ளது. அப்பகுதியில் பல அரச நிறுவனங்களும், பாடசாலைகளும் நீரில் மூழ்கியுள்ளன. தொடர்ந்தும் மழை பெய்து வருகின்றது.

பொத்துவில் பிரதேச செயலகமும், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் இணைந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு உதவிகளை வழங்கி வருகின்றன.

(இ-9)

### யாழ். பல்கலைக்கழக

## கல்விசாரா ஊழியர்களுக்கு அறை அமைக்க ரூ. 20 லட்சம்

யாழ்ப்பாணம், ஜன 6

யாழ். பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் பாவனைக்காக பொது அறை ஒன்றை அமைப்பதற்கு 20 இலட்சம் ரூபாவை வழங்குவதற்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஒப்புக் கொண்டுள்ளது.

அண்மையில் கல்வி உயர் கல்வி பிரதி அமைச்சர் விஸ்வ வர்ணபாலவைச் சந்தித்த யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவரிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

மிக நீண்டகாலமாக பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களுக்கென தனியான ஓர் அறை இல்லை எனவும் —

இதனால் ஊழியர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள் என்பதை அவருக்கு விளக்கியதை அடுத்தே பிரதி அமைச்சர் இந்த நிதியை வழங்க முன்வந்துள்ளார் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து பொது அறை அமைக்கும் பணிக்கான ஆயத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட உள்ளன. (இ-9)

## யாழ். பஸ்தரிப்பு நிலையம் விஸ்தரிக்கப்பட வேண்டும்

### பிராந்திய முகாமையாளர் கருத்து

யாழ்ப்பாணம், ஜன. 6

யாழ். மாவட்டத்தில் பஸ் போக்குவரத்து விரிவுபடுத்தப்பட்டு வருகின்றது. புதிய பஸ்களை இங்கு எடுத்து வர தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. புதிய பஸ்கள் இங்கு வந்து சேர்ந்து பஸ் போக்குவரத்து விஸ்தரிக்கப்படும் பட்சத்தில் யாழ். நகரிலுள்ள பஸ் தரிப்பு நிலையமும் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ். பிராந்திய முகாமையாளர் எஸ். சொக்கலிங்கம் உதயனுக்குத் தெரிவித்தார்.

தற்போது பயன்படுத்தப்படுகின்ற பஸ் தரிப்பு நிலையம் மிகவும் சிறிதாகக் காணப்படுகின்றது. பஸ்கள் தரித்து நிற்பதற்கு போதிய இடவசதியில்லை. பயணிகளின் பாவனைக்காக சிலகொட்டகைகள் அமைக்கப்பட்டுள்ள போதும் பஸ் சேவை விஸ்தரிக்கப்படும் போது இவை பயணிகளின் சேவையைப் பூர்த்தி செய்ய போதுமானவையாக இருக்க மாட்டா.

குறைந்த பஸ்களுடன் நாம் சேவையாற்றும் போதே இது போன்ற நெருக்கடி காணப்படுகிறது. எனவே பஸ் சேவையை விரிவுபடுத்த முன்னர் பஸ் தரிப்பு நிலையத்தை விரிவு படுத்த வேண்டிய தேவை உள்ளது. நான் இது பற்றி சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுடன் கதைத்துள்ளேன். பெரும்பாலும் அவர்கள் உரிய நடவடிக்கைகளை எடுப்பார்கள் என நான் நம்புகின்றேன். இப்படி அவர் மேலும் தெரிவித்தார்

(இ - 9)

## நெடுந்தீவுக்கு புதிய தபாற்பெட்டிகள்

யாழ்ப்பாணம், ஜன. 6

நெடுந்திவுப் பகுதிக்கு புதிய தபாற்பெட்டிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் ஏற்கனவே வைக்கப்பட்டிருந்த தபாற் பெட்டிகளில் பல பழுதடைந்து கடிதங்கள் போட முடியாத நிலையிலிருந்தன.

இப்பெட்டிகளில் பொது மக்கள் தபாலிட முடியாதிருந்ததை தபாலதிபர் நா. தங்கராஜா சுட்டிக் காட்டியதையடுத்து மேலதிகாரிகளால் புதிய தபாற் பெட்டிகள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

(இ-5)

## தொகை மதிப்பீடு: கருத்தரங்கு வியாழனன்று

யாழ்ப்பாணம், ஜன. 6

பாடசாலைத் தொகை மதிப்பீடு தொடர்பாக மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நாளை புதன் கிழமை நடைபெறவிருந்த கருத்தரங்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

நாளை மறுதினம் வியாழக் கிழமை காலை 9 மணிக்கு கருத்தரங்கு இடம்பெறுமென தெல்லிப்பளை, உடுவில் கல்விக் கோட்ட அலுவலர்கள் அறிவித்துள்ளனர். (இ-7)

## வேலை இழந்தோர் சங்கம் சுதந்திரதினத்தில் கறுப்புக்கொடி

### ஆர்ப்பாட்டம் நடத்தவும் முஸ்தீபு

கொழும்பு, ஜன. 6

அடுத்த மாதம் 4 ஆம் திகதி சுதந்திர தின பொன்விழா கொண்டாடப்படும் போது அக் கொண்டாட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக கறுப்புக் கொடிகளை பறக்கவிடுவது என 1980 ஜூலை வேலை நிறுத்தத்தில் பங்கு பற்றியதால் வேலை இழந்தோரின் சங்கம் தீர்மானித்துள்ளது.

அன்றைய தினம் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்துவது என இச்சங்கம் தீர்மானித்துள்ளது.

தேவையிழந்த ஆயிரக்கணக்கான ஊழியர்களும் அவர்களில் தங்கியிருப்போரும் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகையில், கோடிக்கணக்கில் பணம் செலவு செய்து சுதந்திரதின பொன்விழாக் கொண்டாட்டத்தை நடத்துவது குறித்து சங்கம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

(இ-10)

## அமைச்சர் பதவியை ஏற்பதா? இல்லையா?

### சமசமாஜக்கட்சிக்குள் இழுபறி

லங்கா சமசமாஜக் கட்சியின் சார்பில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அமைச்சரவையில் இடம்பெற்ற பேர்னாட் சொய்ஸா இறந்ததைத் தொடர்ந்து, புதிய அமைச்சர் பதவியை ஏற்பது தொடர்பாகக் கட்சிக்குள் முரண்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரதி அமைச்சர் அத்தாவுட செனவிரத்தினவுக்கு ஆதரவான குழுவினர் அமைச்சுப் பதவியை ஏற்க வேண்டும் என்று வற்புறுத்துகின்றனர்.

கட்சியின் செயலாளர் பட்டி வீரக்கோனுக்கு ஆதரவான குழுவினர் அமைச்சுப் பதவியை ஏற்கக்கூடாது என்று வற்புறுத்துகின்றனர்.

இந்த முரண்பாடு காரணமாக அமைச்சர் பதவியை ஏற்பது தொடர்பாக லங்கா சமசமாஜக் கட்சி இன்னும் இறுதி முடிவை எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

அதே நேரம் — கொழும்பு மாவட்ட பொது மக்கள் ஐக்கிய முன்னணி பட்டியலில் பேர்னாட் சொய்ஸாவுக்கு அடுத்தபடியாக உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த டிக்சன் பெரேரா நாளை எம்.பியாக பதவியேற்கவிருக்கிறார்.

(இ-2-31)


ஆண்டு 5 புலமைப் பரிசில் 98

மாதிரிப் பரீட்சை - 7 இல் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள்

★ விஜேந்திரன் ஜனனி — 180 புள்ளி (யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

★ ஞானகாந்தன் ஜகவரதா — 178 புள்ளி (யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)

★ சிவராஜசுந்தரம் கஸ்தூரி — 177 புள்ளி (யா/ ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் - வித்தியாலயம்)

★ கேசவன் துளசிகா — 177 புள்ளி (யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

★ கதிரவேல் பூர்ணிமா — 175 புள்ளி (யா/ சன்மார்க்க மகாவித்தியாலயம்)

★ தில்லைநடராஜா நிர்ஷாகாந்தி — 175 புள்ளி (யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)

★ குணநாதன் மயூரி — 171 புள்ளி (யா/ ஆனைப்பந்தி மெதடிஸ்தமிஷன் வித்தியாலயம்)

9ஆவது பரீட்சை 11 - 01 - 98 ஞாயிறு பரீட்சை 7 பிரிவுகளில் நடைபெறும்.

புதிய நாவலர் கல்வி நிலையம்

நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (52400)

A/L 2000 கலை, வர்த்தகம்

ஆரம்பம்: 10-01-1998 காலை 8 மணி

அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(49903)

உங்கள் வீட்டுப்பிள்ளைகள், எங்கள் கட்சிவேட்பாளர்கள். ஆதரிப்பீர்! ஆதரிப்பீர்!

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)



X

[ஞ- 009]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### திருமண சேவை

68 ஆம், 72 ஆம் ஆண்டு பிறந்த சித்திரை நட்சத்திர முடைய லண்டனில் நிரந்தர வதிவிட உரிமையும் அங்கு அழைக்கக்கூடிய வசதியு முள்ள எக்கவுண்டன்களான பெண்களுக்கு தகுதியுள்ள மணமகன் தேவை, 'துர்க்கா திருமணசேவை' 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
[52364]

### மகாதேவா ஜோதிடம்

''வியாழமாற்றம்'' புத்தகம் எங்கும் கிடைக்கும். சோதிடரை – கடை – 626, பருத்தித்துறை வீதி, (நல்லூர் கந்தசாமி கோயில் முன்பாக) காலை 10 மணி தொடங்கி பிற்பகல் 2 மணி வரையும். ஏனைய நேரங்களில் வீடு – 140, செங்லர் வீதி, (கல்வியங்காடு) இடத்திலும் தினசரி சந்திக்கலாம்.
[சி/2431]

### நூல்கள்

3-01-98 அன்று வானொலியில் குடும்பம் நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் ந. சுந்தரம் பிள்ளையின் நாடகம் எழுதுவது எப்படி? 50/-, யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள் 50/- யாழ் நகரில் எங்கும் கிடைக்கும்.
(52379)

### புலமைப் பரிசில் – 98

8 ஆவது புலமைப் பரிசில் வினாத்தாள் விடைகளுடன் பெற்றுக்கொள்ளலாம். 1,2, 3, 4, 5, 6, 7 ஆவது வினாத்தாள்களையும் மலிவு விலையில் பெறலாம். புதிய நாவலர் கல்வி நிலையம் நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (52402)

## இலங்கையிலிருந்து தமிழகத்துக்கு 67 அகதிகள்

சென்னை, ஜன. 9

இலங்கையில் இருந்து நேற்று முன்தினம் 67 அகதிகள் இரு படகுகளில் இராமேஸ்வரத்தை வந்தடைந்தனர்.

காவல்துறை விசாரணைக்கு பின்னர் மண்டபத்தில் உள்ள அகதி முகாமிகளுக்கு அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர்.

(இ-3)

## உதவிப் பணம் பெற விண்ணப்பம்

உரும்பிராய், ஜன. 6

வலிகாமம் வடக்கு பிரதேசச் செயலகத்தின் மாதாந்த உதவிப்பணம் கோரிப் புதிதாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்கள் அனைவரையும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை மேற்படி பிரதேச சபையின் சமூக சேவைக் குழுக்கு வருகை தரும்படி பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (இ-154)

## உலர் உணவு விநியோகம்

கொழும்புத்துறை, ஜன 6

சங்கானை பிரதேச செயலாளர் பிரிவுக்குள் தங்கியுள்ள இடம் பெயர்ந்தவர்களுக்கான நிவாரண முத்திரையின் 57 ஏ, 58 பி ஆகிய இரண்டு புள்ளிகளுக்கான உலர் உணவுப் பொருள்கள் சங்கானை பலநோக்குக்கூட்டுறவுச் சங்க கிளைக் கடைகளில் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த நிவாரண உலர் உணவுப் பொருள்களை இம் மாதம் 10 ஆம் திகதிக்கு முன் பெற்றுக் கொள்ளுமாறு சங்கத்தின் பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார்.


கொழும்பில் சகல வசதிகளுடன் பாதுகாப்பாகவும் மிகவும் கண்ணியமாகவும் தங்குவதற்கு

**துசிற்ரா விடுதி**

177, பழைய சோனக தெரு,
கொழும்பு - 12.

தொலைபேசி: 341272, 341273, 341274.

குறிப்பு:- வெளிநாடு செல்வதற்கான ஒழுங்குகளும் பயணச் சீட்டுகளும் எமது சகோதர நிறுவனத்தினால் ஒழுங்கு செய்து தரப்படும்.
தொலைபேசி: 343125, 343126, 343128
(சு/2556)



**நிரு ரியூசன் சென்ரர்**

ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில்.

**மீண்டும் ஆரம்பம்**

**A/L 2000 கணித பிரிவு**

ஆரம்பம்: 10 - 01 - 98
சனி 2. 00 மணி

தூயகணிதம்
பிரயோக கணிதம் ] A. பத்மநாதன்

**A/L 1999**

| | |
|---|---|
| பிரயோக கணிதம் | வகையீடு (திங். – புதன்) |
| தூய கணிதம் | – எறியம (செவ். – வியாழன்) |

(முழுப்பாடத்திட்டமும் முடிக்கப்படும்)

[52390]


## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் செல்லையா சுப்பிரமணியம்**
(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்)

தோற்றம்: 03 – 03 – 1928
மறைவு: 02 – 01 – 1993

திதி:- 06 – 01 – 1998

எங்கள் ஆருயிர் அப்பாவே! அணைந்தும் அணையா ஒளி விளக்கே! ஆண்டுகள் ஐந்து ஓடி மறைந்தாலும் உங்கள் அன்பு வதனம் எம் உள்ளங்களை விட்டு அகலாது. ஆலமரமாய் இருந்தீர்கள். அதில் வாழும் பறவைகளாய் நாம் இருந்தோம். கொடுங் காலனவன் கவர்ந்தான் கதறி நாம் துடிக்கின்றோம். காலங்கள் பல கடந்தாலும் எங்கள் உள்ளங்களில் இருந்து உங்கள் நினைவு மறையாது.

தினமும்
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்.

கண்டி வீதி,
கொடிகாமம். (52327)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது வித்தியாலயத்தின் விஞ்ஞான ஆசிரியை
**திருமதி பிரேமாநிதி அம்பிகைபாலன்**
அவர்களின் பாசமிகு மாமனாரும்
இளைப்பாறிய அதிபருமாகிய

**அமரர் இராசையா செல்லத்துரை**

அவர்களின் 31 ஆம் நாள் நினைவு தினமாகிய இன்று (6 - 1 - 98) அன்னாரை நினைவு கூர்ந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா / சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம்.
(49901)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

ஜனனம்: 05 – 07 – 1922



மரணம்: 07 – 12 – 1997


**R. செல்லத்துரை**
(ஓய்வு பெற்ற அதிபர்)

அன்புள்ளம் கொண்ட இனிய தந்தையே!
என்றும் அணையா ஒளி விளக்கே
மனைவியின் அன்புக் கணவனாக
பிள்ளைகளின் அறிவூட்டும் தந்தையாக
மருமக்களின் பண்பு நிறை மாமனாக
பேரப்பிள்ளைகளின் ஆசைத் தாத்தாவாக
சாதிமத வேற்றுமை இன்றி உதவி நல்கும்
உத்தமராக
வாழ்ந்து காட்டிய எமது இனிய தந்தையே!
என்றும் எங்கள் நெஞ்சம் விட்டு அகலாத
தெய்வமே!

உங்கள் ஆத்ம சாந்திக்காக
எல்லாம் வல்ல விநாயகரைப்பிரார்த்திக்கின்றோம்.
என்றும் உங்கள் பிரிவால் வாடும்,
குடும்பத்தினர்.

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய். (52365)

## ஐந்தாண்டு துயரில்



**பிறேமன்**
**கந்தையா பிறேமதாசன்**

பூமிக்கு: 09–06–1974
வானுக்கு: 06–01–1993

ஆற முடியுமோ ஐந்தென்ன, ஐம்பதென்றாலென்ன கூறக் குறையுமோ கூற்றுவனின் கொடும் செயலை தேடக் கிடைக்குமோ குஞ்சு உன்னை இவ்வுலகில் வாடி வதங்கி விட்டோம் ஓடிவா துயர்துடைக்க!

– குடும்பத்தினர்

| தவழ்ந்தது | பறந்தது | நினைப்பது |
|---|---|---|
| தன்னிஸ், பெற்றோல் - நிலைய ஒழுங்கை, காங்கேசன்துறை. | கலைவாணிவீதி, சித்தங்கேணி. | 2-ம்குறுக்குத்தெரு, பருத்தித்துறை. |

(52389)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மாற்றம் தேவை

போரை நிறுத்தி, முன் நிபந்தனை எதுவுமின்றி அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற தேசிய சமாதானப் பேரவையின் மாநாட்டில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நியாயமான தீர்வையும் கௌரவமான சமாதானத்தையும் எட்டுவதற்கு காலதாமதம் இன்றி பேச்சுகளை ஆரம்பிக்க வேண்டும் என்று இரு தரப்பினரையும் வலியுறுத்தும் வகையில் மேற்படி தீர்மானம் அமைந்துள்ளது.

சமாதானத்துக்காகப் போர் நடத்தப்படுவதாக அரசு தெரிவிப்பதை ஏற்க முடியாது என்றும் மக்களுக்காக போர் புரிய வேண்டாம் என்றும் தீர்மானத்தில் அரசிடம் இடித்துரைக்கப்பட்டுள்ளது.

போரின் பாதிப்புகளை தமிழ் மக்கள் அனுபவ ரீதியாக உணர்ந்தவர்கள். ஆகவே போர் நிறுத்தப்பட வேண்டும்; சமாதான வழியில், அரசியல் முறையிலேயே இனப் பிரச்சினைக்கான தீர்வு காணப்பட வேண்டும் என்பதே என்றும் தமிழர்களின் விருப்பமாக உள்ளது.

போரின் பாதிப்புகளைச் சிங்கள மக்களில் பெரும்பாலானோரும் உணரத் தொடங்கியுள்ளனர் என்பதனையே மேற்படி தீர்மானம் வெளிப்படுத்துகிறது. சமாதானத்துக்காகப் போர் — போரினூடு சமாதானம் — என்ற அரசின் கொள்கை அர்த்தமற்றது. அறிவு நுட்பமற்றது என்பதனை சிங்கள மக்களும் புரிந்துள்ளனர்.

ஆகவே அரசானது போரை நிறுத்த உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் என்ற முழக்க கொட்டிய — கர்த்தா — ஜே. ஆர். ஜெயவர்த்தனா கூட போர் கட்டுபடியாகாது என்று உணர்ந்து தான் சமாதானப் பேச்சு மூலம் தீர்வு காண்பதற்கு இறங்கி வந்தார்.

அதனை இன்றைய ஆட்சியாளர் மறந்துவிடக் கூடாது. மேலும், இந்தப் போர் வெல்ல முடியாத போராக நீண்ட காலத்திற்கு இழுபட்டுச் செல்லக் கூடிய ஒன்று என்பது இராணுவ ஆய்வாளர்கள், விமர்சகர்களின் மதிப்பீடு. அதில் உண்மை இல்லாமலும் இல்லை. ஆனால் போர் தொடர்ப்படுகிறது.

போரில்பட்டுள்ள இருதரப்புகளிலும் கௌரவம் பாதிக்கப்படாமல் நிறைவேற்றப்பட்டுள்ளவையில் பேச்சுகளும், தீர்வும் அமைய வேண்டும் என்பதும் முக்கியம்.

இது விடயமும் சமாதானப் பேரவையின் தீர்மானத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

உரிமைப் போராட்டம் நடைபெற்ற நாடுகள், பிரதேசங்களில் எல்லாம் பேச்சுவார்த்தைகளின் மூலமே தீர்வு காணப்பட்டு, சமாதானம் எய்தப்பட்டது.

இந்த உலக அனுபவத்தை கருத்தில் கொள்ளாது, பயப் பிரமையை அனுபவமாகக் கொள்ளாது விடுதலைப்புலிகளை ஓரம் கட்டி விட்டுத் தீர்வைக்கொண்டு வர முயன்றதோ அல்லது அவர்களைப் பலவீனப்படுத்தி விட்டால் தீர்வை திணித்துவிடலாம் என்று நினைப்பதோ நாட்டில் அமைதியைக் கொண்டு வராது. உரிய தீர்வு, நியாயமான தீர்வு ஒன்றை எட்டுவதற்குள் வழிசெய்யாது.

தமிழர் பிரச்சினைக்கு நீதியான தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் அரசுக்கு அக்கறை இருப்பது உண்மையானால், அரசு தனது இப்போதைய போர் நாட்டில் நிலையை மாற்றிக்கொள்வது இன்றியமையாததாகும்.

# யாழ். தேர்தலையும் சர்வஜன வாக்கெடுப்பையும் குழப்பத்திட்டம்!

## அரசுக்கு இரகசியத்தகவல் கிடைத்துள்ளதாம்

கொழும்பு, ஜன. 6

யாழ். மாவட்டத்தில் நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தல்களையும் —

அரசமைப்புத் திருத்தம் தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பையும் — குழப்பும் சதி முயற்சி குறித்த இரகசிய தகவல்கள் அரசுக்கு கிடைத்திருப்பதாக கொழும்பு சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதிகார ஆசை கொண்ட அரசியல் கட்சிகள் இனவாத சக்திகள் மற்றும் தீவிர மதவாத அமைப்புக்கள் ஆகியவை இணைந்து இதற்கான திட்டத்தைத் தயாரித்துள்ளன என்றும் —

இதன் முதல் அங்கமாக நாடெங்கும் இனக் கலவரங்களையும் மதக் கலவரங்களையும் உருவாக்குவது என திட்டமிடப் பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்குமிடையிலும் முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையிலும் அதே போன்று சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையிலும் கலவரங்களை உருவாக்கக்கூடிய காரணிகளை இச் சதிக் கும்பல் தேடி வருவதாகவும் கூறப்படுகிறது.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தனிப்பட்ட காரணத்தினால் கடந்தவாரம் மாத்தளை நகரில் முஸ்லிம் மற்றும் தமிழ் மக்களிடையே கலகம் உருவான தினத்தன்று கண்டி, இரத்தினபுரி, பொலன்னறுவை ஆகிய பகுதிகளிலும் அதே போன்ற கலவரத்தை சிங்கள — தமிழ் இனங்களுக்கிடையில் உருவாக்க முயற்சிகள் எடுக்கப்பட்டன.

பள்ளிவாசல்களில் தொழுகை ஒலிபரப்பப்படும் போது அதைக் குழப்பும் விதத்தில் பள்ளிவாசல்களுக்கு அண்மையில் மாற்று மத நிகழ்ச்சியை ஒலிபரப்பி மக்களிடையே பகையுணர்வை உருவாக்குவது அந்தச் சதித் திட்டத்தின் மற்றொரு அங்கம் ஆகும்.

அண்மையில் மாத்தறையில் உள்ள பள்ளிவாசலில் இவ்வாறான ஒரு சம்பவத்தை உருவாக்க முயற்சிகள் எடுக்கப்பட்டன. கதிர்காமத்தை நோக்கிச் சென்ற தர்மயாத்திரை ஊர்வலத்தையும் ஒரு மதக் கலவரத்தை உருவாக்கக் கூடிய காரணியாக மாற்ற எடுக்கப்பட்ட முயற்சிகள் இறுதி நேரத்தில் கைவிடப்பட்டன.

மலையகத்தில் பிரதி அமைச்சர் சந்திரசேகரின் ஆதரவாளர்களுக்கும், அமைச்சர் தொண்டமானின் ஆதரவாளர்களுக்கும் இடையே குரோதத்தை வளர்ப்பதன் மூலம் மலையகத்திலும் குழப்பங்களை உருவாக்க முயற்சிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த முடியாத சூழ்நிலை உள்ளது என பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகளைக் கொண்டு அரசுக்கு ஆலோசனை வழங்கவைப்பது மற்றொரு தந்திரமாம்.

பொலிஸ் மற்றும் இராணுவத்தைச் சேர்ந்த சிலரும் பாதாள உலகைச் சேர்ந்த கொலைக் கும்பல்களும் இந்தச் சதித்திட்டத்தின் பின்னணியில் இருந்து செயற்படுவதாகத் தெரியவந்துள்ளது.

இப்படி அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-10)

## 6 மாதம் சேவையாற்றிய தென்னிலங்கை டாக்டர்கள் பலருக்கு இடமாற்றம்

திருநெல்வேலி, ஜன. 6

யாழ். சுகாதார திணைக்கள பிரதேசத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் நியமிக்கப்பட்டு ஆறுமாத காலம் சேவையைப் பூர்த்தி செய்துள்ள தென்னிலங்கையைச் சேர்ந்த டாக்டர்களுக்கு இடமாற்ற அறிவித்தல்கள் கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தென்னிலங்கையிலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கே இவர்களுக்கு இடமாற்றம் கொடுக்கப்பட்டுள்ளது.

இவர்களின் வெற்றிடங்களுக்கு புதிய டாக்டர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

(இ-135)

## யால மீதான சிங்களவர்களே

கொழும்பு. ஜன. 6

கதிர்காமத்துக்கு அண்மையிலுள்ள 'யால'வன விலங்கு சரணாலயத்திலுள்ள சுற்றுலாப் பயணிகள் விடுதிக்கு தீ வைப்பதற்குத் தேவையான தகவல்களை மூன்று சிங்களவர்களே புலிகளுக்கு வழங்கினார் எனவும் —

அதற்கு கைமாறாக தலா மூவாயிரம் ரூபா லஞ்சம் வழங்கப்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகள்

## தாக்குதலுக்கு உதவினராம்

அமைப்பைச் சேர்ந்த மூத்த உறுப்பினர் ஒருவர் இத் தகவலை வெளியிட்டதாக மேலும் கூறப்படுகிறது.

(இ-10)

## சாவகச்சேரியில் மாட்டிறைச்சி விலை உயர்வு

தென்மராட்சி, ஜன. 6

சாவகச்சேரி சந்தையில் உள்ள மாட்டிறைச்சிக் கடைகளில் மாட்டிறைச்சியின் விலை பத்து ரூபாவால் அதிகரித்து விற்கப்படுவதாக பொதுமக்கள் தெரிவித்தனர். கடந்த முதலாம் திகதி முதல் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

# தீவுப்பகுதிநிலைமை குறித்து புளொட் அமைப்பு அறிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 6

யாழ். உள்ளூராட்சித் தேர்தல்கள் தொடர்பாக தீவுப் பகுதியில் உள்ள நிலைமை குறித்து புளொட் அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் நேற்று அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தீவுப் பகுதியில் காணப்படுகின்ற தேர்தல் நடவடிக்கைகள் பற்றி ஈ.பி.டி.பி. அமைப்பினர் வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கை உண்மைக்குப் புறம்பானதும், பலவீனத்தை மறைக்க முனைவதுமானதொன்றாகுமெனச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

உள்ளூராட்சித் தேர்தல் நடவடிக்கைகளில் ஏனைய கட்சிகள் சார்பாக தீவுப் பகுதிகளில் ஈடுபடுபவர்களுக்கு இயன்றளவு இடையூறுகளை ஏற்படுத்துவதும் சில சமயங்களில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதுமான சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

ஏனைய கட்சிகளின் ஆதரவாளர்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ மிரட்டப்படுகின்றார்கள். நெடுந்தீவில் தேர்தல் நடத்தப்பட இருக்கின்ற போதிலும் கூட அங்கே ஈ. பி. டி. பியினர் மட்டுமே இயங்கி வருகின்றனர். பாதுகாப்புப் படையினர் எவரும் அங்கு நிறுத்தப்படவுமில்லை.

நெடுந்தீவுப் பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிடும் ஏனைய கட்சி வேட்பாளர்களுக்கு தேர்தல் ஆணையாளர் ஏற்று உறுதியளித்தபடி பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து ஏற்பாடுகள் எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை. முற்றிலும் இராணுவச் சீருடையுடன், ஆயுதபாணிகளாக, பாதுகாப்பு நடவடிக்கையெனும் பேரில் தமது சுதந்திரமான நடமாட்டத்தை தீவுப்பகுதிகளில் கொண்டுள்ள ஈ.பி.டி. பியினர் எந்தவித பாதுகாப்பு ஏற்பாடுகளுமின்றி நிராயுதபாணிகளாகத் தங்கியுள்ள ஏனைய கட்சி உறுப்பினர்களால் தாக்கப்பட்டதாகத் தெரிவிப்பது யதார்த்தத்தை மூடி மறைக்கும் தவறான குற்றச்சாட்டாகுமென்பதை அனைத்து மக்களுமே புரிந்து கொண்டுள்ளனர்.

1994 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின் போது தீவுப் பகுதியில் இடம்பெற்ற தேர்தலைப் போன்றதொரு தேர்தலே எதிர்வரும் 29ஆம் திகதியும் தீவுப் பகுதியில் இடம்பெற வேண்டுமென்று ஈ. பி. டி. பியினர் விரும்புவதாகவே நாம் கருதுகின்றோம். [illegible] களை மீறுவதன் மூலம் பெற்றுக்கொள்ள முயற்சிக்கும் கபடத் தனத்தையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

மேலும் ஈ. பி. டி. பியினர் சார்பில் அறிக்கை எழுதுபவர்களும், வெளியிடுபவர்களும் தீவுப் பகுதியின் உண்மைநிலை யாதென்பதை அறியாதவர்களாக இருக்க வேண்டும் அல்லது உண்மை நிலை பற்றி அவர்களுக்குத் தொடர்ந்து மறைக்கப்பட்டு வருகின்றது எனவே நாம் கருதுகின்றோம்.

ஜனநாயக நடைமுறைகளின் தாம் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும், சக கட்சிகளின் சுதந்திரமான தேர்தல் நடவடிக்கைகளுக்கு ஒரு போதும் இடைஞ்சலாக இருக்கமாட்டோமென திரும்பத் திரும்பக் கூறி வரும் ஈ. பி. டி. பியினர் தீவுப் பகுதிகளில் முற்றுமுழுதான ஒரு ஜனநாயகச் சூழலை உருவாக்கித் தமது வெற்றியையும் தீவுப் பகுதி மக்களிடம் தமக்குள்ள ஆதரவையும், உறுதிபட எடுத்துக் காட்டட்டுமே? இதனை ஒரு சவாலாக எடுத்துக் காட்டவும் ஈ. பி. டி. யினர் கூறுகின்ற ஜனநாயகமும் அதுவாகத்தான் இருக்க வேண்டும் என்றே எண்ணுகின்றோம். — எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## கட்டட திறப்பு விழா

நீர்வேலி வடக்கு, காமாட்சி அம்பாள் முன்பள்ளி நிலையத்தின் புதிய கட்டடத்திறப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இடம் பெறவிருக்கின்றது.

காமாட்சியம்பாள் சனசமூக நிலையத் தலைவர் மு.தேவராசா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினர்களாக வலிகிழக்குப் பிரதேச செயலர் க. கேதீஸ்வரனும், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி. கிருஷ்ணசாமியும் கலந்து கொள்வர். (இ-7)

## மலேரியா தீவிரம்

மலேரியா காய்ச்சலால் பீடிக்கப்பட்ட பலர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்குப் படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த நான்கு நாள்களில் இருவர் மலேரியா காரணமாக ஆஸ்பத்திரியில் இறந்துள்ளனர். (ஐ-ரீ)

## தெளிகருவி பெறலாம்

திருநெல்வேலி, ஜன. 6

மாமரங்களுக்கு பூச்சித் தாக்கங்களும், நோய்களும் பரவும் காலம் நெருங்கிக் கொண்டிருப்பதால் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு கிருமிநாசினி விசுறுவதற்கு ஏற்ற பெரிய தெளிகருவி நல்லூர் கமநலச் சேவை கேந்திர நிலையத்தில் தற்போது இருப்பதாகவும் அதனை மிகவும் குறைந்த கட்டணத்தில் பெற்று இப்பகுதி பொதுமக்கள் பயன்படுத்தமுடியும் என்றும் நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் இருந்து அண்மையில் இறக்குமதி செய்யப்பட்ட இந்தத் தெளிகருவி யாழ். கமநலச் சேவைகள் திணைக்களத்தால் நல்லூர் கமநலச் சேவை கேந்திர நிலையத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

## மீண்டும் மாலை நேர மீன் சந்தை

யாழ்ப்பாணம், ஜன. 6

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் ஆனைக்கோட்டை சந்திக்கு அருகில் மாலை நேர மீன் சந்தைகளை கட்டத் தொடங்கியுள்ளது.

மாலை நேரத்தில் மீன் வாங்குவதில் பலர் முண்டியடிப்பதால் மீனுக்குப்பெரும் தட்டுப்பாடு ஏற்படுவதைக் காண முடிகிறது. (ஐ-ரீ)

## சந்தை திறப்பு

தென்மராட்சி, ஜன. 6

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தினரால் ஐந்து லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட பளை சந்தைக் கட்டடத் தொகுதி கடந்த செவ்வாய்க்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

(ஐ 117)

## நாளை

மார்கழி 23

புதன்கிழமை

திதி: நவமி

காலை 6.34 வரை.

தசமி

பின் இரவு 4.33 வரை.

நட்சத்திரம்: அச்சுவினி

முற்பகல் 11.09 வரை.

சுபநேரம்: 5 02-6.32

ராகுகாலம்: 12 32-2.02

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

வேலணை பிரதேச செயலர்
திரு ஆ. தியாகராசா
அவர்களின் அன்புத் தாயார்

## அமரர் ஆறுமுகம் வடிவாம்பிகை

அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
அங்கத்தவர்கள்.
புங்குடுதீவு - நயினாதீவு
ப. நோ. கூ. சங்கம்.

(சி/2558)



# "எக்காளத் தொனி"

## நற்செய்திக் கூட்டங்கள்

நிச்சயம் தரும் நற்செய்தி
அற்புதம் - ஆச்சரியம் - விடுதலை
பிசாசுகள் விரட்டப்பட—நோய்கள் குணமாக
மனநோய்கள் நீக்கப்பட—சமாதானம் பெற
வாருங்கள்! வாருங்கள்!! வாருங்கள்!!!

தேவ செய்தி அளிப்பவர்கள்:
சகோதரன் கிளவுஸ் மொல்லர் (டென்மார்க்)
பாஸ்ரர் மேவின் குணசெல்வம் (இலங்கை)

இடம்: எக்காளத் தொனி
பூரண சுவிசேஷ சபை
இல.21, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
காலம்: 6ம், 7ம், 8ம், திகதி தை மாதம் 1998
நேரம்: பிற்பகல் 3.00 மணிமுதல் 6 மணிவரை (புதிய நேரம்)

அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்!
இயேசு கிறிஸ்துவின் நாமத்தால்
விடுதலை நிச்சயம் உண்டு.
அல்லேலூயா!

52418))



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
10-02-1935
உதிர்வு:
18-12-1996

## அமரர் A.K. சிவஞானம்

(முன்னாள் அரச மரக்கூட்டுத்தாபன ஒப்பந்ததாரர்)

திதி: 06-01-1998

பெற்று வளர்த்தெம்மை
பேணி நிதம் காத்து.........
நற் தந்தையாகி நீ எமக்கு
நயம் பெறவே கல்வி தந்தாய்!
அற்புதமாய் எமக்கெல்லாம்
அனைத்தும் அளித்தவனே!
அத்தனையும் நாம் எண்ணி
அழுது நிதம் புலம்புகிறோம்
பொற் பதங்கள் கொண்ட
பொன்னார் சிவனடியை
போயடைந்து ஆண்டொன்றும்
போனதய்யா இப்புவியில்
முற்றாக உங்கள் முழு நினைவைத் தாங்கி நிதம்
முழுமையாய் நின் தன்
விருப்பினை முடித்து வைப்போம்.
என்றும் உங்கள் நினைவுடனே வாழும்

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரன்.

171A, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(52394)


## நீதியான தேர்தலை...

(முதலாம் பக்கத் தொடர்)

சத்தை ஜனாதிபதிக்கு நேரில் விளக்கினோம்.

அத்தகைய ஒழுங்கீனங்கள் நடைபெறாமல் நீதியான—சுதந்திரமான—சட்ட ஒழுங்கு முறையில் அமைந்த — ஜனநாயக பூர்வமான —தேர்தல்கள் அங்கு நடைபெறுவதை உறுதி செய்வதற்குத் தான் சகல நடவடிக்கைகளையும் எடுப்பதாகவும் —

இது விடயத்தில் தாம் கடும் போக்கைக் கடைப் பிடிக்கப் போவதாகவும் —

ஜனாதிபதி குறிப்பிட்டார்.

வாக்களிப்புத் தினத்தன்று கண்காணிப்புக் குழு மற்றும் படையினர், பொலீஸாரின் உதவியுடன் நேர்மையான முறையில் தேர்தல் விதிகள் கடைப்பிடிக்கப்படுவது உறுதி செய்யப்படும். கண்காணிப்புக் குழுவினர், தேர்தலில் போட்டியிடும் கட்சிகளின் பிரதிநிதிகளையும் அழைத்துக் கொண்டு வாக்களிப்பு நிலையங்களுக்கு நேரில் சென்று நிலைமைகளை அவதானிப்பர். எந்த ஒழுங்கீனத்துக்கும் இடமளிக்கப்படமாட்டாது. — என்று ஜனாதிபதி உறுதிபடத் தெரிவித்தார்.

தீவுப் பகுதியில் மாற்றுக் கட்சியினர் தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபட முடியாமல் இருப்பது குறித்தும் ஜனாதிபதியிடம் விளக்கினோம்.

உடனடியாக — உரிய — நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி வாக்குறுதியளித்தார்.

— இவ்வாறு சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டார்.

(உ-21)

## கோடீஸ்வர...

(முதலாம் பக்கத் தொடர்)

இவ்வகையான 32 ஆயிரத்து 400 மோட்டார் ஷெல்களை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட கப்பலே காணாமல் போயுள்ளது.

மோட்டார் ஷெல்கள் நிரப்பப்பட்ட 12 கொள்கலன்களை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட அக் கப்பல் இருவாரங்களுக்குள் கொழும்புத் துறைமுகத்தை அடையும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இக் கப்பல் புறப்பட்ட ஒரு சில தினங்களுக்குள் காணாமற்போயுள்ளதுடன் அந்தக் கப்பல் விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டுள்ளது என நம்பப்படுகிறது.

(ஐ-10)

## அம்பாறையில்...

(முதலாம் பக்கத் தொடர்)

கடந்த சனியிரவு 9.30 மணியளவில் மேற்கொண்ட தாக்குதலில் ஓர் ஊர்காவலர் உயிரிழந்தார்.

முகமதுஅலி பாறூக் (21 வயது) என்ற ஊர்காவலரே உயிரிழந்தவராவார்.

அதைத் தொடர்ந்து — இரவு 10.30 மணியளவில் — சம்மாந்துறையிலிருந்து சுமார் ஒன்றரை மைல் தொலைவில் உள்ள வீரமுனையில் — ஊர்காவலர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு தமிழர் உயிரிழந்தனர்.

மூத்ததம்பி நித்தியானந்தன் (வயது 23), இராசையா நவநாதன் (வயது 17) ஆகிய தமிழரே உயிரிழந்தவராவர். மேற்படி மரணம் தொடர்பாக பொலீஸார் ஏழு ஊர்காவலர்களைக் கைது செய்து நேற்று கல்முனை மாஜிஸ்திரேட் அன்ரன் பாலசிங்கம் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

அப்போது சந்தேச நபர்களை எதிர்வரும் வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

(உ-3-21)

## படை...

(முதலாம் பக்கத் தொடர்)

வத்தையின் ஆலோசனைக்கு இணங்க இந்தக் கல்லூரி கட்டப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பாதுகாப்புக் கல்லூரியின் அதிபராகத் தற்போது வடபகுதியில் படை அதிகாரியாகப் பணியாற்றும் ஒரு மூத்த இராணுவ அதிகாரியை நியமிப்பதற்கு ஜனாதிபதி தனது ஒப்புதலை வழங்கியுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நாட்டில் நிலவி வரும் பாதுகாப்பு நிலவரங்களின்படி இராணுவ அதிகாரிகளைப் பயிற்சிக்காக வெளிநாடுகளுக்கு அனுப்புவது சாத்தியமில்லை என்பதாலேயே இக் கல்லூரி அமைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டிஷ் இராணுவ அதிகாரிகள் குழுவொன்று இது தொடர்பாக ஆராய விரைவில் இங்கு வரவுள்ளது என்று [illegible] தெரிவித்துள்ளது.

(ஐ-10)

## ஐ.தே.கவின்...

(முதலாம் பக்கத் தொடர்)

வாறு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நடை பெற்ற ஐ.தே.க. நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசின்நேர அட்டவணைப்படி யோசனைகளை முன்வைக்க தமது கட்சி தயாராக இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மாற்று யோசனைகளை ஆராயும் ஐ. தே. க. குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களானறொனிடிமெல் ஏ. சி. எஸ். ஹமீட், நிரோஷன்பெரேரா, கே. என். சொக்ஸி, மகிந்த அமரசிங்க, காமினி ஜெயவிக்கிரம பெரேரா. ஜோஹான் அபயகுணசேகர, ஹென்றிஜெயமஹா ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இவர்களின் முதலாவது கூட்டம் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

(ஐ-9)

## 500 தொண்டர்...

(முதலாம் பக்கத் தொடர்)

பின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

நேற்று ஜனாதிபதியைச் சந்தித்த சமயம் யாழ்ப்பாணத்தில் தொண்டர் ஆசிரியர்களாகப் பணிபுரியும் ஆயிரத்து இருநூறு பேரை நிரந்தரச் சேவைக்கான பதவியில் அமர்த்தும்படி தான் வலியுறுத்தியதாக சுரேஷ் பிரேமச்சந்திரன் சொன்னார்.

தமது கோரிக்கையை பரிவோடு செவிமடுத்த ஜனாதிபதி —

யாழ்ப்பாணத்தில் தொண்டர் ஆசிரியர்களாகப் பணிபுரிவோர் தொடர்பாக இரண்டு பட்டியல்கள் இருப்பதாகவும், அதில் முதல் பட்டியலில் உள்ள ஐந்நூறு பேரை உடனடியாக — விரைவில் — அவர்களின் தகைமைகளை உறுதி செய்வதற்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்க தான் ஏற்பாடு செய்வதாக உறுதியளித்துள்ளதாகவும் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டார்.

இப்பட்டியலில் — தகைமை உள்ள — தொண்டர் ஆசிரியர்களுக்கு உடனடியாக நியமனம் வழங்கப்படும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டதாகவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று மாலை தெரிவித்தார்.

(உ-21)


# வியாபாரிகளுக்கு

உங்களுக்குத் தேவையான 10g, 50g, 100g, 200g மற்றும் சகலபடிகளும் தனித்தனியாகவோ செற்றாகவோ பெற்றுக்கொள்ள

## மாஸ்ரர் ஸ்கேல் சேவிஸ்

(அரச அங்கீகாரம் பெற்றவர்கள்)
200, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

(52431)


உ

# யாழ்ப்பாணம்
# நாட்டார் வழக்கியற் கழகம்

நாட்டார் கலைகளைப் பேணி வளர்ப்பதைத் தனது நோக்கமாகக் கொண்ட யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகமானது 1998 ஆம் ஆண்டுக்குரிய தனது செயற்குழுவினைக் கடந்த 06-12-1997 அன்று நடைபெற்ற கூட்டத்தில் அமைத்துக் கொண்டுள்ளது. பின்வரும் செயற்குழுவினர் தெரிவுசெய்யப்பட்டனர்.

கழகத் தலைவர்:
பேராசிரியர் அ. சண்முகதாஸ்

உபதலைவர்:
திருமதி பூ. அருந்தவநாதன்

இணைச் செயலாளர்கள்:
திரு. பொ. அருந்தவநாதன்
திரு. இ. விசாகரூபன்

இணைப் பொருளாளர்கள்:
திரு. நா விமலநாதன்
செல்வி சி. செல்வரஞ்சிதம்

ஒருங்கிணைப்பாளர்:
கலாநிதி திருமதி ம. சண்முகதாஸ்

அங்கத்தவர்கள் (செயற்குழுவில் இருப்போர்)

| | |
|---|---|
| திரு. ச. கிருபானந்தன் | செல்வன் வே. தூயகுமார் |
| " வே. சிவகுமாரன் | திரு. பொ. அரவிந்தன் |
| " செ. செல்வக்குமார் | செல்வி ப. சிவகலை |
| " சி. கேசவராசா | திரு. வே. ஜோன்சன் |
| " வ. செல்வரட்ணம் | செல்வி மு. கலைவாணி |
| " வை. விஜயபாஸ்கரன் | |

(52410)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06-01-98 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org